**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகம், புதுச்சேரியில் இன்றும் நாளையும் மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு



இலங்கை அருகே வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை நீடிப்பதால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் இன்றும் நாளையும் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் இரு தினங்களில் தென்கிழக்கு வங்கக் கடலில் மேலும் ஒரு காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாக வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தமிழக, புதுச்சேரி மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதே நேரத்தில், சென்னையை பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் உள் மாவட்டங்களில் வறண்ட வானிலையே நீடிக்கும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ஏற்காட்டில் மலர்க் கண்காட்சி இன்று தொடக்கம்

ஏற்காடு இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி, கலை விழா வெள்ளிக்கிழமை (டிச.26) தொடங்கி, 3 நாள்கள் வரை நடைபெறவுள்ளது. சேலம் மாவட்டத்தில் உள்ள ஏழைகளின் உதகை என அழைக்கப்படும் ஏற்காட்டில் இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி, கலை விழா வெள்ளிக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. இந்த விழாவுக்கான ஊர்வலம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு குதிரைகள் அணிவகுப்புடன் சேலம் மாவட்ட அரசு இசைப் பள்ளி மாணவர்களின் நாகஸ்வரம், தவில் ஆகியவற்றுடன் சேலம் ஸ்ரீ

அங்கம்மாள் கலைக் குழுவினரின் நையாண்டி மேளம், கரகாட்டம், கிராமிய கலை நிகழ்ச்சி, ஜலகண்டாபுரம் தனபால் குழுவினரின் கோல்கால் ஆட்டம், தப்பாட்டம், வாண வேடிக்கை உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுடன் படகுத் துறையில் இருந்து தொடங்கவுள்ளது. மேலும், சேலம் தாய் விழுதுகள் வழங்கும் திருநங்கைகளின் கலை நிகழ்ச்சி, அண்ணா பூங்காவில் 5,000 மலர்த் தொட்டிகளில் 2 லட்சம் மலர்களைக் கொண்ட மலர்க் கண்காட்சி, சிறப்பு மலர் அலங்காரங்கள் தொடக்க விழா, பல்வேறு அரசுத் துறைகளின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி தொடக்கம் ஆகியவை நடைபெறவுள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப சிறப்புப் பேருந்து வசதி, மலிவு விலை உணவு, 10 இடங்களில் சேலம் மாவட்ட மோட்டார் சைக்கிள் மெக்கானிக்குகள் சங்கம் சார்பில், இரு சக்கர வாகன இலவச பழுது பார்க்கும் முகாம், சுற்றுலாப் பயணிகளுக்கான குதிரை சவாரி, சிறப்பு மருத்துவ முகாம், சேர்வராயன் கோயில், தலைச்சோலையில் சிறப்பு பூஜை ஆகியவை நடத்தப்பட உள்ளன.

## <u>மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்கிறது</u>



மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவைவிட திறப்பு குறைவாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. கடந்த இரு நாள்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சற்று அதிகரித்துள்ளது. செவ்வாய்க்கிழமை காலை அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 1,597 கன அடியாக இருந்தது. இது புதன்கிழமை காலை நொடிக்கு 2,164 கன அடியாகவும், வியாழக்கிழமை காலை நொடிக்கு 2,316 கன அடியாகவும் அதிகரித்தது. வியாழக்கிழமை மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கும் நொடிக்கு 1,400 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர்வரத்தை விட திறப்பு குறைவாக இருப்பதால், மேட்டூர்

அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 96.51 அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர் இருப்பு 60.41 டி.எம்.சியாக இருந்தது.

## மணிமுத்தாறு அணை: இன்று தண்ணீர் திறப்பு

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் இருந்து பாசனத்துக்காக வெள்ளிக்கிழமை (டிச.26) முதல் தண்ணீர் திறக்க முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் உத்தரவிட்டார். இது குறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் இருந்து பிசானப் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அதை ஏற்று மணிமுத்தாறு பிரதான கால்வாயின் 3, 4-ஆவது பிரிவு பாசன நிலங்களுக்கு வெள்ளிக்கிழமை (டிச.26) முதல் தண்ணீர் திறந்துவிட உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம், நான்குநேரி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை, ராதாபுரம், தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் ஆகிய வட்டங்களில் உள்ள 12,018 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் என முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

## மணிலா பயிரில் புரோடினியா புழுவைக் கட்டுப்படுத்த ஆலோசனை

மணிலா பயிரில் காணப்படும் புரோடினியா புழுவைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் பொ.ஜெயக்குமார் ஆலோசனை வழங்கியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மணிலா பயிரில் காணப்படும் புரோடினியா புழுவின் தாய் அந்துப் பூச்சிகள் இலையின் மேல்பாகத்தில் குவியல் குவியலாக சுமார் 200 முதல் 300 வரை முட்டைகள் இடுகின்றன. முட்டையிலிருந்து வெளிவரும் இளம் புழுக்கள் பளபளப்பான பச்சை நிறத்துடன் காணப்படும். இளம் புழுக்கள் 5 முதல் 6 நாள்கள் ஒரே இலைத் தொகுதியில் இருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டி உண்கின்றன. இளம் புழுக்கள் கூட்டமாக வாழ்ந்தாலும், வளர்ந்த புழுக்கள் தனித் தனியாக பிரிந்து மற்ற இலைகளுக்கு சென்று நடுநரம்பு பகுதியை விட்டுவிட்டு மீதி இலைப் பகுதியை வெட்டி உண்ணும். அதிகம் தாக்குண்ட வயல்களைப்

பார்த்தால் மாடு மேய்ந்தது போன்று காட்சியளிக்கும். முட்டையிலிருந்து வெளிவந்த புழு அந்துப் பூச்சியாக மாறுவதற்குள் 5 முறை தன் தோலை உரித்துக் கொள்கிறது. நான்காவதாக தோல் உரித்தவுடன் இப்புழுக்களை பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். எனவே, இவற்றை அழிக்க வயிற்று நஞ்சு அல்லது நச்சுத்தீனி தயாரித்து அவற்றை உண்ணும்படி செய்ய வேண்டும். மணிலா விதை விதைத்த 40-வது நாளில் (அதிக வளர்ச்சிப் பருவத்தில்) இதன் தாக்குதல் அதிகமாக இருக்கும். மேலும், ஜனவரி மாதங்களிலும் இதன் தாக்குதல் அதிகமாக இருக்கும். நான்காவது தோலுரிப்பு பருவத்தில் 100 புழுக்கள் சராசரியாக 524 கிலோ இலையைத் திண்ணக்கூடியது. இந்த நச்சுத்தீனியை நாமே தயாரித்துக் கொள்ளலாம். இதற்கு, பச்சரிசி தவிடு 5 கிலோ, வெல்லம் 1 கி, செவின் தூள் 500 கிராம் தேவை. வெல்லக் கரைசலை தயார் செய்து அதனுடன் அரிசி தவிட்டை தரையில் கொட்டி வெல்லத்தையிட்டு இரண்டரக் கலக்க வேண்டும். பிறகு, நச்சு மருந்து செவின் தூளை நன்றாக கிளற வேண்டும். சிறிது சிறிதாக நீர் ஊற்றி பிசைய வேண்டும். உருண்டை பிடிக்கும் பதத்தில் அதனைக் கொண்டு சிறிய சிறிய உருண்டைகளாக பிடித்து வயல் ஓரங்களிலும், நடுவிலும், ஆங்காங்கே மாலை நேரத்தில் போட்டுவைக்க வேண்டும். மறுநாள் காலை இதனை உண்டு புழுக்கள் ஆங்காங்கே செத்துக் கிடப்பதைக் காணலாம். எனவே, மணிலாவில் நச்சுத்தீனியை இட்டு புரோடினியா புழுவை கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சோளம் விளைச்சல் அமோகம்விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி</u>**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மானாவாரி சாகுபடியில் விதைக்கப்பட்ட சோளம், அமோகமாக விளைந்துள்ளதால், விவசாயிகள் பெரும்

மகிழ்ச்சியடைந்துள்ளனர். தமிழகத்தில், கடலோர மாவட்டங்களை தவிர, மற்ற மாவட்டங்களில், சோளம் பரவலாக பயிர் செய்யப்படுகிறது. இதில், சிவகங்கை, வேலூர், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நெல்லுக்கு மாற்று பயிராக சோளம், 8,000 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் தற்போதும், கிராமப்புறங்களில் உள்ளவர்கள், சோளத்தை முக்கிய உணவாக பயன்படுத்தப்படுத்தி வருகின்றனர். சோளத்தில், "கார்போஹைட்ரேட்' அதிகம் உள்ளதால், உடலுக்கு ஆரோக்கியம் தரும் உணவாகவும் விளங்குகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை காலத்தில், சோளத்தை விதைத்து விட்டால், அதே ஈரப்பதத்தில் முளைத்துவிடும். பயிர்கள் எட்டு அடி வரை வளரும்போது, மழை இல்லாமல் போனாலும், பயிர் கருகாது. பயிர் வளரும்போது, ஒரு முறை மழை பெய்து விட்டால், அதில் சோளம் கதிர் விட்டு விளைந்து விடும்.இதனால், மாவட்டத்தில், ஜெகதேவி, பர்கூர், வேப்பனப்பள்ளி, போச்சம்பள்ளி, ராயக்கோட்டை, மத்தூர், ஊத்தங்கரை ஆகிய பகுதிகளில், சோளம் பரவலாக பயிர் செய்யப்படுகிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் பெய்த மழையின் போது, விவசாயிகள் சோளத்தை விதைத்தனர். வடகிழக்கு பருவமழையும், இப்பகுதியில் ஓரளவுக்கு கைகொடுத்ததால், சோளம் நன்கு வளர்ந்து, தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. அதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 33 நெல் கொள்முதல் நிலையம்ஈரோடு மாவட்டத்தில் திறப்பு

ஈரோடு:காலிங்கராயன், எல்.பி.பி., பாசன பகுதியில், நெல் அறுவடைக்கு தயாராக உள்ள பகுதியில், 33 கொள்முதல் நிலையங்கள் திறக்க, மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. காலிங்கராயன் பாசனத்துக்கு, ஆண்டுதோறும் ஜூன், 16ம் தேதி தண்ணீர் திறக்க வேண்டும். இந்தாண்டு, ஜூலை, 21ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. 15,743 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. நெல்

மட்டுமின்றி கரும்பு, மஞ்சள், வாழையையும் விவசாயிகள் பயிரிட்டு உள்ளனர். நெற்பயிர் சாகுபடி முடிந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. இரண்டாம் போகத்துக்கும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதே போல், எல்.பி.பி., பாசனத்துக்கு உட்பட்டு, இரண்டாம் மண்டலத்தில், 1,03,500 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. நான்கு ஆண்டுக்கு பின், தண்ணீர் திறக்கப்பட்டது. எனவே, பெரும்பாலான விவசாயிகள், நெற்பயிரை சாகுபடி செய்தனர். காலிங்கராயன், எல்.பி.பி., பாசன பகுதியில் நெல் அறுவடை துவங்கி நடந்து வருகிறது. இந்நிலையில் 33 நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.நடப்பு கே.எம்.எஸ்., 2014-15 பருவத்தில், காலிங்ராயன், எல்.பி.பி., பாசன பகுதிகளில் சாகுபடி செய்துள்ள நெல் அறுவடைக்கு தயாராக உள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம், 33 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க, கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். இதன்படி என்.ஜி.பாளையம், பொலகாளிபாளையம், கூகலூர், டி.என்.பாளையம், ஏளூர், புதுக்கரை புதூர், புது வள்ளியம்பாளையம், காசிபாளையம், கரட்டடிபாளையம், திருநீளிப்பாலம்(பாரியூர்), கள்ளிப்பட்டி, அத்தாணி, பி.மேட்டுப்பாளையம், அய்யம்பாளையம், அவல்பூந்துறை, எழுமாத்தூர், மொடக்குறிச்சி, கொடுமுடி-1, 2, சிவகிரி-1, 2, காஞ்சிகோவில், வெள்ளோடு, கே.ஜி.வலசு, பசுவபட்டி, பவானி, அம்மாபேட்டை, பெரிய புலியூர், நாகரணை, கவுந்தப்பாடி, நசியனூர், உக்கரத்தில் துவங்க உள்ளது. நெல்லை, 17 சதவீத ஈரப்பதத்துக்கு மிகாமல், நுகர்பொருள் வாணிப கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விற்கலாம். பொதுரகம், குவிண்டால் குறைந்தபட்சம், 1,360 ரூபாய், ஊக்க தொகை, 50 ரூபாய் வழங்கப்படும். சன்னரகம் குவிண்டால், 1,400 ரூபாய், ஊக்கத்தொகை, 70 ரூபாய் வழங்கப்படும். வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள, மாவட்ட நிர்வாகம் கேட்டு கொண்டுள்ளது.

## க.பாளையத்தில்விவசாயிகள்கருத்தரங்கம்

கோபி:உழவன் உற்பத்தியாளர்கள் நிறுவனம் மற்றும் ஐ.சி.ஐ.சி.ஐ., வங்கி சார்பில், மஞ்சள் விவசாயிகள் கருத்தரங்கம், கடுக்காம்பாளையத்தில் நடந்தது. தலைவர் நல்லசாமி, துணைத்தலைவர் வெங்கடேஸ்வரன், தமிழக விவசாயிகள் சங்கம் செயலாளர் செங்கோட்டையன், கீழ்பவானி பாசன சபை இணை செயலாளர் வெங்கடாசலபதி உட்பட பலர் பேசினர். மஞ்சளை தரம் பிரித்து விற்பனை, குறைந்த வட்டியில் வங்கிக்கடன், எடை போட்டு காப்பீடு வசதியுடன் இருப்பு வைத்தல், மானிய விலையில் தார்பாய்கள் வழங்குவது, சாகுபடி மற்றும் விற்பனையில் உள்ள புதிய யுக்திகள், அரசின் திட்டங்கள், மாற்றுப்பயிர் சாகுபடி முறைகள், செயல்பாடுகள் குறித்து பேசினர்.

## செங்கரும்பு உற்பத்தியில் விவசாயிகள்ச்... தீவிரம்: தொடர் மழையால் சாகுபடி அமோகம்

திருச்சி:பொங்கல் திருவிழா நெருங்கும் நிலையில், திருச்சி சுற்று வட் டார பகுதிகளில் செங்கரும்பு சாகுபடி இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக, செங்கரும்பு தரமானதாக உள்ளதால், கூடுதல் விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர்.தமிழர்களின் முக்கிய திருவிழாவாக கொண்டாடப்படும் பொங்கல் திருவிழா வரும், ஜனவரி மாதம் 14 ம் தேதி முதல், மூன்று நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. பொங்கல் என்றாலே, செங்கரும்பு தான் நினைவுக்கு வரும். தை மாத முதல் தேதியன்று, கொண்டாடப்படும் பொங்கல் திருநாளில், சூரிய பகவானுக்கு சர்க்கரை பொங்கலுடன், செங்கரும்பும் சேர்ந்து படைக்கப்படுவது வழக்கம். இதனால், பொங்கல் திருவிழாவை கணக்கில் கொண்டு, செங்கரும்புவை விவசாயிகள் சாகுபடி செய்து வழக்கம். கடந்த இரண்டாண்டுகளாக வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் தமிழகத்தில் பெய்யவில்லை. இதனால், கடந்தாண்டு

செங்கரும்பு சாகுபடி குறைந்ததால், விலையும் அதிகரித்தது. ஆனால், நடப்பாண்டு தமிழகத்தில் கடந்த, இரண்டு மாதங்களாக பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. மேலும், திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்தும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், நடப்பாண்டு செங்கரும்பு சாகுபடியில் பெரும்பாலான விவசாயிகள் இறங்கியுள்ளனர். திருச்சி மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் செங்கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, திருவளர்சோலை, பொன்னுரங்கபுரம், பனையபுரம் மற்றும் உத்தமர்சீலி பகுதிகளில் அதிகளவில் செங்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. பொங்கல் திருவிழாவுக்கு இன்னும், 20 நாட்கள் உள்ள நிலையில், செங்கரும்பு தர மானதாக வளர, சோகையை அகற்றும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுப்பட்டு வருகின்றனர். செங்கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் கூறுகையில்," கடந்த இரண்டாண்டு களாக போதிய மழை இல்லை. நடப்பாண்டு எதிர்பார்த்த மழை இருந்தது. இதனால், செங்கரும்பு சாகுபடி பரப்பளவு அதிகரித்துள் ளது. செங்கரும்பும் தரமானதாக உள்ளது. கடந்தாண்டை விட, நடப் பாண்டு செங்கரும்புக்கு கூடுதல் விலை கிடைக்க வாய்ப்புள்ளது. பொங்கல் திருவிழாவுக்கு இரண்டு நாட்களுக்கு முன், அறு வடையை துவங்குவோம்.தற்போது, கோவில் திருவிழாக்களில் விற்பனை செய்ய தேவைக்கு ஏற்ப அளவில் மட்டும், அறுவடை செய்கிறோம். தற்போது, 10 கரும்புகள் கொண்ட கட்டுக்கு, 175 ரூபாயை வரை கிடைக்கிறது. பொங்கல் திருவிழா நேரத்தில், விலை அதிகரிக்க கூடும். இறுதி கட்டமாக பெரும்பாலான பகுதியில், செங்கரும்பில் விளைந்துள்ள சோகையை அகற்றும் பணியில் ஈடுப்பட்டுள்ளோம். இதனால், செங்கரும்பு நல்ல தடிமனாக உயர்ந்து வளரும். இனிப்பின் அளவும் அதிகரிக்கும்"என்றனர்.

## பல் பாகற்காய் விற்பனை

திண்டுக்கல்:திண்டுக்கல் காந்தி மார்கெட்டில் பல் பாகற்காய் விற்பனைக்கு வந்துள்ளது. மருத்துவ குணமுள்ள இந்த பாகற்காயை மக்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர். காந்தி மார்க்கெட் வியாபாரி ஜோசப் கூறுகையில், "பல்பாகற்காய் அய்யலூர், தங்காமாபட்டி, குரும்பபட்டி பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் என்பதால் அதிகமானோர் வாங்கிச் செல்கின்றனர். குறைந்த அளவிலேயே பாகற்காய் வருவதால் உடனே விற்பனையாகிவிடுகின்றன. ஒரு கிலோ பல் பாகற்காய் விலை ரூ.100க் கும், அதலை பாகற்காய் ரூ.50 க்கும் விற்பனை யாகிறது." என்றார்.

## ரூ. 40 லட்சம் பருத்தி ஏலம்

நாமக்கல்:நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 40 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது.நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 3,000 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,969, குறைந்தபட்சமாக, 4,561 ரூபாய், சுரபி ரகம் அதிக பட்சமாக, 5,169, குறைந்த பட்சமாக, 4,860 ரூபாய். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,269, குறைந்த பட்சமாக, 3,969 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 40 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது.

## "மாசி பச்சை கொழுந்து' விளைச்சல்அதிகம்:விழாக்காலங்களால் விற்பனை படுஜோர்

சிவகங்கை:சிவகங்கை அருகே மாலை, கதம்பத்திற்கு பூக்களுடன் சேர்க்கப்படும் "மாசி பச்சை கொழுந்து' விளைச்சல் அதிகரித் துள்ளது.கார்த்திகை, மார்கழி, தை மாதங்கள் ஆன்மிக மாதங்களாக கடை பிடிக்கப்படுகின்றன. இக்கால கட்டத்தில் ஐயப்பனை தரிசிக்க சபரிமலை, முருகனை தரிசிக்க பழநி, மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோயிலுக்கு பக்தர்கள் மாலை அணிந்து செல்வது வழக்கம். இது மட்டுமின்றி தை பொங்கல் பண்டிகை ஆகியவற்றிற்காக கோயில்களில் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்படும். பக்தர்கள் வீடுகளில் தினமும் சுவாமி தரிசனம் செய்ய பூ மாலைகள், கதம்பம் ஆகியவற்றை அதிகளவில் பயன்படுத்துவர். இக்கால கட்டத்தில் பூக்களுக்கு அதிக கிராக்கி இருக்கும். சுவாமிக்கு அணிவிக்க, பக்தர்களின் தேவைக்காக அன்றாடம் பூக் கடைகளில் பூ மாலை, கதம்பம் விற்பனை அதிகமாக காணப்படும். இந்த மாலை, கதம்பம் தயாரிக்க பூக்களுடன் "மாசி பச்சை கொழுந்து' சேர்க்கப்படும். விளைச்சல்: சிவகங்கை அருகே சாலூரில் "மாசி பச்சை கொழுந்து' செடிகள் அதிகம் நடவு செய்து, மதுரை பூ மார்க்கெட், சிவ கங்கையில் உள்ள பூக்கடைகளுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர். விவசாயிகள் 250 கிராம் எடையுள்ள மாசி பச்சை கொழுந்து முடிச்சு ஒன்றை பூக்கடைகாரர்களுக்கு ரூ.7க்கு மட்டுமே விற்கின்றனர். ஆண்டுதோறும் இச்செடிகளை நடவு செய்து, வருவாய் பெறலாம் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். சாலூர் விவசாயி எல்.போஸ் கூறுகையில்," ஆண்டுதோறும் கிணற்று தண்ணீர் இருந்தால், "மாசி பச்சை கொழுந்து'வை நாற்று போல் பாவிவிடுவோம். 60 நாட்களில் அவை விற்பனைக்கு தயாராகும். 10 சென்ட் நிலத்தில் தினமும் 500 முடிச்சு வரை (கட்டு) எடுக்கலாம். சாலூரில் இருந்து தினமும் 250 கிலோ மாசி பச்சை கொழுந்து செடி விற்பனைக்கு செல்லும். ஒரு

முடிச்சு ரூ.10க்கு விற்றால் தான் மாதம் ரூ.30 ஆயிரம் வரை லாபம் வரும்," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பொங்கலுக்கு பன்னீர் கரும்புகள் தயார் அ. தயாநிதி</u>**

பொங்கல் பண்டிகைக்கு பன்னீர் கரும்புகள் விழுப்புரம் மாவட்டத்தில் அமோகமாக விளைந்துள்ளது. சாகுபடி குறைவால் விலை உயர வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். தமிழர்களின் முக்கிய திருவிழாவான பொங்கல் பண்டிகைக்கு இன்னும் சில வாரங்களே உள்ளன. பொங்கல் திருவிழாவன்று அனைவரது வீடுகளிலும் உணவு வகைகளை வைத்து படைப்பது வழக்கம். அதில் முக்கியமாக இடத்தினை பெறுவது பன்னீர்கரும்புகள். பன்னீர்கரும்புகள் படைப்பதற்கும் மட்டுமின்றி சுவைப்பதற்கும் மிகவும் இனிமையாக இருக்கும். இதன்காரணமாக பன்னீர்கரும்புகளுக்கு மவுசு இன்னும் குறையவில்லை. இதனால் ஆண்டுதோறும் பன்னீர்கரும்பு சாகுபடியில் விவசாயிள் ஆர்வம் காட்டிவருகின்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் ஆற்றங்கரையோரம் உள்ள பகுதிகளில் பன்னீர்கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. விழுப்புரம் அருகே உள்ள பிடாகம், குச்சிப்பாளையம், அத்தியூர்திருக்கை உள்ளிட்ட பகுதியில் பன்னீர்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. பன்னீர்கரும்பு சாகுபடி செய்வது, மிகவும் கடினமான பணி என்பதால் பெரும்பாலானோர் இதில் ஈடுபடுவதில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவட்டத்தில் பன்னீர்கரும்பு சாகுபடி செய்யும் பரப்பளவு குறைந்துகொண்டு வருகிறது. இயற்கை சீற்றத்தினால் ஏதாவது ஒருவகையில் பன்னீர் கரும்பு சாகுபடிக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடுகிறது. தானே புயலினால் பன்னீர் கரும்பு சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. கடந்த ஆண்டு போதிய மழை இல்லாததால், பன்னீர் கரும்பு பெருக்கவில்லை. இதுபோல் ஏதாவது ஒரு இயற்கை சீற்றத்தின் காரணமாக பன்னீர் கரும்பு சாகுபடி பயிரிடுவதை விவசாயிகள் குறைத்துக்கொண்டனர்.

அதன்படி பன்னீர் கரும்பு சாகுபடி கடந்த ஆண்டைவிட 25 சதவீதம் குறைந்துள்ளது. சாகுபடி குறைவால் பொங்கல்பண்டிகைக்கு கரும்பு விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரி வித்துள்ளனர். பொங்கலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் வியாபாரிகளும் கரும்பு தோட்டத்திற்கு நேரடியாக வந்து விலை பேச தொடங்கிவிட்டனர். கடந்த ஆண்டு ஒரு கட்டு கரும்பு விலை ரூ. 200க்கு கொள்முதல் செய்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர். ஆனால் அப்போது கரும்புகள் விற்பனையாகாத தால் நஷ்டத்துக்கு ஆளானதாக தெரிவித்தனர். எனவே இந்த ஆண்டு ஒரு கட்டு கரும்பு விலை ரூ.200க்கு கீழ் கொடுத்தால்தான் எங்களுக்கு கட்டுபடியாகும் என்கிறார்கள் வியாபாரிகள். இது குறித்து குச்சிப்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி கூறுகையில், பன்னீர்கரும்பு சாகுபடி நல்ல லாபம் தரக்கூடிய பயிர்தான். ஆட்கூலி அதிகம். ஒரு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை செலவாகும். இதில் 1200 கட்டு கரும்புகள் உற்பத்தி செய்யலாம். ஒரு கட்டில் 20 கரும்புகள் இருக்கும். ஒரு கட்டு கரும்பு கடந்த ஆண்டு ரூ. 200க்கு விற்பனை செய்யப்பட்டது. எங்களுக்கு நல்ல லாபம் கிடைத்தது. இந்த ஆண்டு உற்பத்தி குறைந்துள்ளது. ஒரு கட்டு கரும்பு ரூ.200க்கும் மேல் விற்பனை செய்தால்தான் எங்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். இந்த ஆண்டு காலதாமதமாக மழை பெய்ததால் கரும்பு போதிய அளவில் பெருக்கவில்லை. மற்றபடி கரும்புகள் போதுமான உயரம் வளர்ந்துள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கரும்புகள் சென்னை போன்ற வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றார்.

## 4,831 ஏக்கர் பாசனத்திற்காக நல்லதங்காள் அணை திறப்பு

தாராபுரம், : திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே உள்ள நல்லதங்காள் அணையிலிருந்து பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். வருவாய் கோட்டாட்சியர் சரவணமூர்த்தி முன்னிலை வகித்தார். துணை

சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அணையிலிருந்து தண்ணீரை திறந்துவிட்டார். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் குழந்தைசாமி, உதவி செயற்பொறியாளர்கள் முத்துசாமி, சுப்பிரமணி, உதவி பொறியாளர் முகமது சுலைமான், இளம் பொறியாளர் இளங்கோ, சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி, தாராபுரம் நகரமன்ற தலைவர் கலாவதி, துணைத் தலைவர் கோவிந்தரா£ஜ், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ரமேஷ், குண்டடம் ஒன்றியக்குழு தலைவர் செந்தில்குமார், மூலனூர் ஒன்றியக்குழு தலைவர் கலையரசி, ஊராட்சி மன்றத் தலைவர் ராஜேந்திரன், கூட்டுறவு சங்கத் தலைவர் காமராஜ், அரசு வழக்கறிஞர் ஆனந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். செயற்பொறியாளர் குழந்தைசாமி கூறியதாவது: நல்லதங்காள் அணையின் முழு கொள்ளளவு 29.52 அடி. தற்போது நீர் இருப்பு 28.28 அடி உள்ளது. நீர்வரத்து தற்போது இல்லை. அணைக்கு உட்பட்ட பொன்னிவாடி, நல்லாம்பாளையம், ஆலாம்பாளையம், பெரமியம், தூரம்பாடி, மற்றும் மூலனூர் ஆகிய கிராமங்களில் 4,831 ஏக்கர் பாசனம் உள்ளது. பாசனத்திற்காக 23.12.2014 முதல் 17.3.2015 வரை பிரதான கால்வாய் மூலம் தகுந்த இடைவெளியில் 35 நாட்களுக்கு, நாளென்றுக்கு 35 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படும். உடையார்குளத்திற்கும் இரண்டு முறை 5 நாட்கள் வீதம் 10 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். இவ்வாறு செயற்பொறியாளர் தெரிவித்தார்.

**<u>சேவூர் விற்பனைக் கூடத்தில் ரூ.28 லட்சம் நிலக்கடலை ஏலம்</u>**

அனுப்பர்பாளையம், ; அவினாசி அருகே சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் நிலக்கடலை ஏலம் நேற்று நடந்தது. ஏலத்துக்கு, 2700 நிலக்கடலை மூட்டை வந்திருந்தன. சென்ற வாரத்தைவிட நிலக்கடலை வரத்து அதிகரித்து இருந்தது. குவிண்டால் ஒன்றுக்கு (காய்ந்தது) முதல் ரக நிலக்கடலை ரூ.3800 முதல் ரூ.4000 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.3540 முதல் ரூ.3700

வரையிலும், பச்சை நிலக்கடலை ரூ.3000 முதல் ரூ.3300 வரையிலும் ஏலம் போனது. மைசூர், தெங்குமராட்டா, குன்னத்தூர், ராயர்பாளையம், லூர்துபுரம், மங்கரசவலையபாளையம், போத்தம்பாளையம், அவினாசிபுதூர், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம், அன்னூர் ஆகிய பகுதிகளில் இருந்து 298 விவசாயிகளும், 9 வியாபாரிகளும் பங்கேற்றனர். மொத்தம் ரூ.28 லட்சத்துக்கு நிலக்கடலை ஏல விற்பனை நடந்தது.

## <u>26ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

திருச்சி, : மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட் டம் வரும் 26ம் தேதி காலை 10.30 மணிக்கு திருச்சி கலெக்டர் அலுவலக கூட்டமன்றத்தில் நடக்கிறது. இந்த கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று நீர்பாசனம், வேளாண்மை, இடுபொருட்கள், வேளாண் கடனுதவிகள், விவசாய மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் மற்றும் வேளாண் தொடர்புடைய கடனுதவிகள் நேரிலோ அல்லது மனுக்கள் மூலமோ தெரிவிக்கலாம். விவசாயி கள் இந்த வாய்ப் பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இத்தகவலை கலெக்டர்ஜெயஸ்ரீதெரிவித்துள்ளார்.

## <u>அரசு மானியத்துடன் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு அழைப்பு</u>

பெரம்பலூர்,: வேளாண் பொறியியல் துறைமூலம் அரசு மானியத்துடன் வேளாண் கருவிகளைப்பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் தரேஸ் அகமது தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது : தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்மூலம் வேளாண்மையில் இயந்திர மயமாக்கலை ஊக்கப்படுத்தும் வகையில் பெரம்பலூர் மாவட்டத்திற்கு 2014-15ம் ஆண்டில் பலதானியங்களுக்கான கதிரடிக்கும் கருவி 3ம், 8 குதிரைத்திறனுக்கு குறைவான களைஎடுக்கும் கருவிகள் 20, விசைத்தெளிப்பான் 20, இருபாலரும் இயக்கும் வகையிலான கருவிகள் 5, இருசக்கர உழுவைக் கருவிகள் 10, சுழல்கலப்பைகள் 15, உழுவை

இயந்திரத்தால் இயக்கப்படும் கருவிகள் 5, சிறப்புகருவிகளான தட்டைவெட்டும் கருவி, குழிதோண்டும்கருவி 9, வைக்கோல்கட்டும்கருவி 3 எனமொத்தம் 90 வேளாண் கருவிகள் ரூ.29.74 லட்சம் அரசு மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசாணையும் நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது. இதில் சிறு, குறு பெண் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்திலும் வழங்கும் வகையில் 71 வேளாண் கருவிகளுக்கு ரூ23.61 லட்சம் ஒதுக்கீடும், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின விவசாயிகளுக்கு 50 சதவீத மான்யத்தில் வழங்கும் வகையில் 19 வேளாண் கருவிகளுக்கு ரூ.6.13லட்சம் ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது. இந்தக் கருவிகளுக்கு வழங்கும் மான்யமானது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மான்யத்தை மிகாமல் இருக்கும். இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் விண்ணபத்துடன் கணினிசிட்டா, அடங்கல், சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் 2, வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சிறு,குறு விவசாயி சான்று, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தவராக இருப்பின் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின வகுப்பு சான்று, துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி ஆகிய ஆவணங்களுடன் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள், வேளாண் பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர், விஜிஎம் அப்பார்ட்மெண்ட், பள்ளிவாசல்தெரு துறைமங்கலம் என்ற அலுவலகத்தில் விண்ணபத்தை சமர்ப்பித்து, முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் வேளாண்கருவிகளை அரசு மானியத்துடன் பெற்றுப் பயனடையலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## <u>செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 63 டன் சின்னவெங்காயம் ரூ11 லட்சத்துக்கு விற்பனை</u>

பெரம்பலூர்,: செட்டிக்குளம் வெங்காய வணிகவளாகத்தில் ஒரேநாளில் 63 டன் சின்னவெங்காயம் ரூ.11 லட்சத்திற்கு ஏலம் எடுக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. பெரம்பலூர் மாவட் டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் வேளாண் விற்பனை மற் றும் வேளாண்

வணிகத்துறையின் மூலம் திறந்த முறை ஏலம் நடைபெற்றது. இதில் துறையூர் பிரகம்பி, ஊட்டத்தூர், நக்கச்சேலம், மங் கூன், செட்டிக்குளம், நாட்டார் மங்கலம், சிறுவயலூர், கூத்தனூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, சிறுவாச் சூர், மாவலிங்கை, அடைக்கம்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 167 விவசாயிகள் தங்களது வயல் களில் விளைந்த சின்ன வெங்காயத்தினை திறந்த முறை ஏலத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்தனர். திருநெல்வேலி, தென் காசி, செட்டிக்குளம், சத்திரமனை, பொம்மனப்பாடி, பாடாலூர், இரூர், சிறுவ யலூர், கே.புதூர், மங்கூன் ஆகிய பகுதிகளை சேர்ந்த 21 வியாபாரிகள் 817 மூட்டை, அதாவது 63,050 கிலோ சின்ன வெங்காயத் தினை ஏலத்தில் எடுத்த னர். இதில் சின்னவெங்காயம் அதிகப்பட்சமாக கிலோ ரூ.34.50க்கும் சராசரியாக ஒருகிலோ ரூ.18க் கும் விற்பனையானது. இதன் மூலம் ரூ.11,11,728க்கு விற் பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளு க்கும் பணம் உடனடியாக வழங்கப்பட்டது. இவ் வணிக வளாகத் தில் வாரந்தோறும் செவ் வாய், வியா ழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்தமுறை ஏலம் நடை பெற்று வரு கிறது. விவசாயிகள் தங்களது வெங்காய விளை பொருளை நன்கு சுத்தப்படுத்தி, சின்ன வெங்காயம் ஏலம் நடத்தப்படும் நாட் களில் கொண்டுவந்து விற் பனை செய்து பயன் பெற லாம் என  கலெக்டர் தரேஸ் அகமது தெரிவித்துள்ளார்.

## <u>கறவை பசு வளர்ப்பு விவசாயிகளுக்கு பயிற்சி</u>

ஆலங்குடி, : கறவை பசுக்கள் வளர்ப்பில் அதிக லாபம் பெறுவது எப்படி? என்பது குறித்து ஆலங்குடி அடுத்த வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுந்தரலிங்கம், பயிற்சி வகுப்பை துவக்கிவைத்துப் பேசுகையில், கறவை பசுக்களை நவீன விஞ்ஞான முறைகளை பின்பற்றி வளர்த்தால் அதிக லாபம் பெறலாம். மேலும் கிடேரி வளர்ப்பு மிக முக்கியமானதாகும் என்றார். இதைத் தொடர்ந்து, ஒரத்தநாடு கால்நடைத் துறை மருத்துவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் புவராஜன் பயிற்சி அளித்தார். கிடேரி இனங்கள், வளர்ப்புக்கு ஏற்ற தட்ப வெப்ப நிலை, சாதக

பாதகங்கள், தீவன பராமரிப்பு, இனப் பெருக்க மேலாண்மை, நோய் தடுப்பு உத்திகள், பதிவேடுகள் பராமரிப்பு, வரவுசெலவு கணக்கிடுதல், இலாபம் எப்படி பெறுதல் மற்றும் ஒருங்கிணைந்த பசுந்தீவன உற்பத்தி, சொந்தமாக தீவனம் தயாரித்தல் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பயிற்சி வகுப்பில் வம்பன் உதவிப் பேராசிரியர் நூர்ஜஹான் பேசியதாவது: சராசரியாக ஒரு கிடேரிக்கு அதன் தீவனச் செலவு ரூ.10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரை ஆகும். தடுப்பூசி மற்றும் மருந்து செலவு (தேவைப்பட்டால) ரூ.2 ஆயிரம் வரை ஆகும். எனவே, தோராயமாக ரூ.18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை செலவழித்து வளர்க்கப் படும் கிடேரி கன்றானது ஓராண்டுக்குப் பிறகு ரூ.30 ஆயிரம் முதல் 35 ஆயிரம் வரை விலை போகிறது என்றார்.

## இயந்திர நெல் நடவு முறை விவசாயிகளுக்கு ரூ.1500 மானியம்

தேனி, : இயந்திர நெல் நடவு முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.1500 வீதம் மானியத் தொகை வழங்கப்படும் என தேனி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்தார். தேனி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திலகர் கூறியதாவது: வீரபாண்டி கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயந்திர நெல் நடவு முறையில் 32 ஏக்கர் நடவு செய்யப்பட்டுள்ளது. இயந்திர நடவு செய்வதால் சாகுபடி செலவீனம் மற்றும் கூலியாட்கள் தட்டுப்பாடு குறைக்கப்படுகிறது. மேலும் இயந்திர நடவு முறை மூலம் நடப்பட்ட நன்பயிரில் களை எடுத்தல், உரமிடுதல், இதர பயிர் பாதுகாப்பு முறைகள் செய்வதற்கு மிகவும் எளிதாக இருக்கும். ஒரு குத்துக்கு 70 முதல் 75 சிம்புகள் இருக்கும். இதனால் மகசூல் அதிகமாகும். இயந்திர நடவு முறையில் நடவு செய்யும் விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.1500 மானியத் தொகை வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கூடுதல் மழை பொழிவால் விவசாய?உற்பத்தி?இலக்கை?எட்டும்?வாய்ப்பு

சிவகங்கை,: சிவகங்கை மாவட்டத்தில் நடப்பாண்டில் சராசரியை விட கூடுதல் மழைப்பொழிவு கூடுதலாக இருப்பதால், விவசாய உற்பத்தி இலக்கை எட்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை மூலம் ஆண்டு தோறும் மழை பெய்து வருகிறது. மாவட்ட ஆண்டு சராசரி மழையளவு 904மி.மீ ஆகும். ஆனால் கடந்த 2008ம் ஆண்டிற்கு பிறகு கூடுதல் மழைப்பொழிவு இல்லை. 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில் மாவட்டம் முழுவதும் போதிய மழை இல்லாமல் கடும் வறட்சி நிலவியது. இதனால் விவசாயம், குடிநீர் தேவைகளுக்கு தண்ணீர் இல்லாமல் கண்மாய், குளங்கள் முழுமையாக வறண்டது. விவசாயம் செய்த பயிர்கள் அனைத் தும் கருகியது. கால்நடைகளுக்கு தீவனமின்றி வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. கடந்த 2012ம் ஆண்டு வறட்சி மாவட்டமாக அறிவிக்கப் பட்டது. 2008ம் ஆண்டு 1,283 மி.மீ, 2009ம் ஆண்டு 772மி.மீ, 2010ம் ஆண்டு 916மி.மீ, 2011ம் ஆண்டு 872மி.மீ, 2012ம் ஆண்டு 549மி.மீ, 2013ம் ஆண்டு 705மி.மீ மழை பெய்தது. 2014ம் ஆண்டு தற்போதுவரை 920 மி.மீ மழை பதிவாகியுள்ளது. ஆண்டு சராசரி மழை 904 மி.மீ அளவைவிட இந்த ஆண்டு கூடுதல் மழை பதிவாகியுள்ளது. கடந்த 2010ம் ஆண்டிற்கு பிறகு தற்போது சராசரி மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது. மாவட்டம் முழுவதும் பொதுப்பணித்துறை கண்மாய்கள் 716, ஒன்றியக் கண்மாய்கள் 4,188 உள்ளன. மழையால் கண்மாய்கள் மற்றும் குளங்களில் நீர் காணப்படுகிறது. பெரும் பாலான கிராமங்களில் குளத்து நீரே குடிநீராக பயன்படுத்தப்படுகிறது. தற்போது குளங்களில் உள்ள நீர் 2015ம் ஆண்டு கோடையை சமாளிக்க உதவியாக இருக்கும். இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் கணேசன் கூறியது, ‘இந்த ஆண்டு சராசரி மழையைவிட கூடுதல் மழை பெய்திருப்பதால் விவசாய பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. வழக்கமாக பருவமழை ஆகஸ்ட், செப்டம்பரில் பெய்யும். ஆனால் இந்த ஆண்டு அக்டோபரில் சற்று தாமதமாக பெய்த தால் விவசாய பணிகளும் தாமதமாக தொடங்கப்பட்டது. விவசாய செய்யும் நில அளவு மற்றும் உற்பத்தி இலக்கை எட்டிவிடும் வாய்ப்பு

உள்ளது'என்றார்.

**அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் 7 வகையான பழங்களை தரும் ஒட்டுரக மாமரக்கன்று உற்பத்தி**

விருதுநகர், : திருவில்லிபுத்தூர் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் ஒரு மாமரத்தில் 7 வகையான பழங்களை தரும் ஒட்டுரக கன்றுகளை உற்பத்தி செய்துள்ளனர். இது தொடர்பாக திருவில்லிபுத்தூர் பூவானி தோட்டக்கலைத் துறை அலுவலர் சுந்தர்ராஜன் கூறுகையில், 'மா மரக்கன்றுகள் நட்ட ஒரு ஆண்டில் பூக்க துவங்கும். 2ம் ஆண்டு முதல் காய்க்க துவங்கும். பூவானி அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் பஞ்சவர்ண மா கன்று கடந்த ஆண்டு நடப்பட்டது. அதன் கிளைகளில் ஹிமாயுன், பங்கனப்பள்ளி, பஞ்சவர்ணம், காசாலட்டு, மல்லிகா, காதிர், அல்போன்சா (செந்தூரம்) ஆகிய மா மரக் கன்றுகள் ஒட்டு சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மரத்தில் மார்ச் மாதம் துவங்கி ஒவ்வொரு ரகமாக ஆகஸ்ட் இறுதி வரை பழங்கள் கிடைக்கும். ஒரு மரத்தில் 7 வித பழங்கள் காய்க்கும். இந்த மரம் 2016ம் ஆண்டு முதல் காய்க்க துவங்கும். கன்னியாகுமரியில் இதுபோன்ற மாமரம் உள்ளது. மாமரத்தில் 900 வகையாக ரகங்கள் உள்ளன. 900 ரகங்களையும் ஒரு மா மரத்தில் ஒட்டு சேர்த்து விதவிதமான பழங்களை பெற முடியும். இதே போன்ற ஒட்டு ரக மா கன்று தேவைப்படும் விவசாயிகள் தேவையின் அடிப்படையில் ஆர்டர் கொடுத்தால் உற்பத்தி செய்து வழங்கப்படும். இரு ரகங்களை ஒட்டு சேர்த்த மாங்கன்று ரூ.75க்கு கிடைக்கும். அதிகமாக சேர்க்கப்படும் ஒவ்வொரு ரக ஒட்டு சேர்க்கைக்கும் ரூ.50 முதல் ரூ.100 வரை கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும்' என்றார். தேவைப்படுவோர் பூவானி தோட்டக்கலைத்துறை அலுவலர் சுந்தர்ராஜை செல்: 9750549687 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**பருத்தியில் காய் உதிருதலை தடுக்க வேளாண்துறை அதிகாரிகள் ஆலோசனை**

திருச்சுழி, : விருதுநகர் மாவட்டத்தில் பருத்தியில் பூ மற்றும் காய் உதிருதலை தடுக்க விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆலோசனை

வழங்கியுள்ளனர். விருதுநகர் மாவட்டத்தில், மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள பருத்தியில், கடந்த இரு மாதங்கள் பெய்த மழையால், பூ மற்றும் காய்கள் திடீரென உதிர ஆரம்பித்துள்ளன. இதனை தடுக்க விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளனர். இதுகுறித்து அதிகாரிகள் கூறும்போது, 'பூ மற்றும் காய் உதிருதலுக்கு ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வளர்ச்சி ஊக்கிகளின் சமவிகிதமற்ற தன்மை காரணமாகும். இதனை தவிர்க்க பருத்திக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் நிறைந்த கலவையான டி.என்.ஏ.யூ பருத்தி பிளஸ் தெளிக்க வேண்டும். இதனால், பூ மற்றும் காய் உதிருதலை தடுத்து அதிக விளைச்சல் பெற முடியும். இந்த டி.என்.ஏ.யூ பருத்தி பிளஸ் தெளிப்பதனால் 18 சதவீதம் கூடுதலான விளைச்சலும், காய்கள் முழுமையாக வெடித்து சீரான அறுவடைக்கும் உதவும்' என்று தெரிவித்துள்ளனர். டி.என்.ஏ.யூ பருத்தி பிளஸ் பயன்படுத்தும் முறை பருத்தியில் பூக்கும் மற்றும் காய்பிடிக்கும் தருணத்தில்¢ ஏக்கருக்கு 2.5 கிலோ டி.என்.ஏ.யூ பருத்தி பிளஸ் கலவையை 200 லிட்டர் நீர் மற்றும் தேவை யான ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். விவசாயி களுக்கு பருத்தி, மக்காச்சோளம், பயறு மற்றும் நிலக்கடலை வளர்ச்சி ஊக்கிகள், நுண்ணுயிரிகள் மற்றும் தீவனப்புல் விதைகள் அருப்புக்கோட்டை கோவிலாங் குளத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேளாண் அறிவியல் நிலையத்தில் கிடைக்கும். மேலும் விவசாயிகள் 04566 220561 என்ற எண்ணை தொடர்பு விவரம் தெரிந்து கொள்ளலாம்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பாசான பருவ சாகுபடிக்காக மணிமுத்தாறு அணை இன்று திறப்பு**

**ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு**



சென்னை, முதல்–அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று வெளியிட்டுள்ள அறிவிப்பில்கூறப்பட்டுள்ளதாவது:–

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் இருந்து மணிமுத்தாறு பிரதானக் கால்வாயின் 1 மற்றும் 2–வது பிரிவு பாசன நிலங்களுக்கு பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருமக்களிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டு கோளினை ஏற்று, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணிமுத்தாறு அணையில் இருந்து மணிமுத்தாறு பிரதானக் கால்வாயின் 1 மற்றும் 2–வது பிரிவு பாசன நிலங்களுக்கு பிசான பருவ சாகுபடிக்கு 26–12–2014 முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது. இதனால், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், நாங்குநேரி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை, ராதாபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் ஆகிய வட்டங்களில் உள்ள 10 ஆயிரத்து 834 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

## அரியலூரில் மழை நீர் வாய்க்காலை தூர் வாரும் பணி தீவிரம்



அரியலூரில் மழை நீர் வாய்க்காலை தூர் வாரும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மழைஅளவுகுறைவு

அரியலூர் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக மழை அளவு குறைந்து வந்தது. இதனால் மாவட்டம் முழுவதும் உள்ள பெரிய ஏரிகள், குளம், குட்டைகள் மற்றும் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போனது. நிலத்தடி நீரின் அளவும் மிகவும் குறைந்து விட்டது. எனவே ஏரிகள் மற்றும் நீர் வரும் வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார வேண்டும் என்று தினத்தந்தியில்

செய்தி வெளியிடப்பட்டு இருந்தது. மாவட்ட நிர்வாகம் இது சம்பந்தமான ஆலோசனை கூட்டங்கள் நடத்தி முதல் கட்டமாக அரியலூர் நகரில் உள்ள செட்டி ஏரி, அரசுநிலையிட்டான் ஏரி, குறிஞ்சான்குளம் ஆகிய 3 ஏரிகளுக்கு நீர் வரும் வாய்க்கால்களை தனியார் சிமெண்டு ஆலைகள் பங்களிப்புடன் தூர் வாருவது என முடிவு செய்து அந்த வாய்க்கால்களின் அளவுகளை அளந்து குறியீடு செய்வதற்கு கிராம நிர்வாக அதிகாரி மற்றும் நில அளவையர் ஆகியோரை கலெக்டர் பணியில் அமர்த்தினார். அதன்படி முதலில் செட்டி ஏரிக்கு நீர் வரும் வரத்து வாய்க்கால் 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு 5 அடி ஆழம் 20 அடி அகலத்தில் தூர் வாரும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது.

சிறியகுழாய்கள்

அந்த வாய்க்காலில் புறவழிச்சாலையில் இருந்து ஏரியில் நீர் நுழையும் பகுதி வரை பல இடங்களில் தனியார் கட்டிடங்களுக்கு சிறு சிறு பாலங்கள் அமைக்கப்பட்டு தண்ணீர் வரும் அளவை கணக்கிடாமல் சிறிய குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. எனவே அது போன்ற தடைகளையும், வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றி தூர் வார வேண்டும் என்று இந்த பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## <u>வரத்து குறைவால் கடந்த 5 ஆண்டுகளில் ஒரு கட்டு கரும்பு 2 மடங்காக விலை உயர்வு ஒரு கரும்பு ரூ.40–க்கு விற்பனை</u>



திண்டுக்கல், கடந்த 5 ஆண்டுகளில் வரத்து குறைவால் ஒரு கட்டு கரும்பு 2 மடங்காக விலை உயர்வானது. சில்லரை விற்பனையில் ஒரு கரும்பு ரூ.40–க்கு விற்பனை ஆகிறது.

<u>தித்திக்கும் கரும்பு</u>

கரும்பு விற்பனைக்கு வந்து விட்டாலே பொங்கல் வந்து விட்டது என்று அர்த்தம். அந்தளவிற்கு ஒவ்வொரு வருடமும் பொங்கலின் வருகையை நமக்கு தித்திக்கும் சுவையோடு அறிமுகம் செய்வது கரும்பு. பருவமழை தவறாமல் பெய்து வரும் காலங்களில் கரும்பின் விளைச்சல் அதிகம் இருக்கும். அதனால்

நகரின் திரும்பிய பக்கமெல்லாம் கரும்பு விற்பனை நடைபெறும். ஆனால் இப்போது அப்படி இல்லை. கரும்பு வரத்து குறைவாக இருப்பினும், திண்டுக்கல் நகரில் கடந்த சில நாட்களுக்கு முன்பு காந்தி மார்க்கெட் பகுதிகளில் கரும்பின் விற்பனை தொடங்கி விட்டது. சில்லரை விற்பனையில் இப்போது ஒரு கரும்பு ரூ.40–க்கு விற்பனை ஆகிறது. மொத்த விலையில் சற்று குறைச்சலாக விற்கப்படுகிறது. கடந்த சில வருடங்களுக்கு முன்பு கரும்பின் விலை இந்தளவிற்கு உயர வில்லை. கடந்த சில மாதங்களுக்கு முன்பு பருவ மழை பெய்தும் கரும்பின் விலை குறையவில்லை. இதுகுறித்து கரும்பு வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

<u>விளைச்சல் இல்லை</u>

திண்டுக்கல்லை பொறுத்தவரை, கொசவபட்டி, பஞ்சம்பட்டி, நத்தம் வாடிப்பட்டி, தவசிமடை ஆகிய பகுதிகளில் கரும்பு சாகுபடி பெருமளவில் நடைபெறும். ஆனால் இந்த வருடம் அவ்வாறு சாகுபடி நடக்கவில்லை. கடந்த வருடம் மழை பொய்த்தது தான் அதற்கு முக்கிய காரணம் ஆகும். கரும்பு ஒரு வருடம் விளைந்த பிறகு தான் அறுவடை செய்ய முடியும். இந்த பொங்கலுக்கு அறுவடை செய்வது போன்று முன்பே மழை பெய்யவில்லை. அதனால் திண்டுக்கல்லை சுற்றியுள்ள கிராமங்களில் கரும்பு அதிகம் நடப்படவில்லை. இதனால் கடலூர், மதுரை மேலூர் போன்ற வெளியூர்களில் இருந்து தான் கரும்பு வாங்கி வந்து வியாபாரம் செய்ய வேண்டி இருக்கிறது. அதனால் ஒரு கட்டு ரூ.300–ல் இருந்து ரூ.400 வரை விற்க வேண்டி உள்ளது.

<u>2 மடங்கு விலை</u>

ஆனால் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு விலை நிலவரம் இவ்வாறு இல்லை. ஒரு கட்டு கரும்பு ரூ.60–ல் இருந்து ரூ.200– வரையிலும், பொங்கல் பண்டிகை அன்று ரூ.250–க்கும் விற்பனை செய்தோம். ஆனால் இந்த வருடம் நிலைமை அப்படி இல்லை. ஒரு கட்டு கரும்பின் கொள்முதல் விலையே ரூ.200 ஆகிறது. இதுதவிர போக்குவரத்து செலவு உள்பட இன்னும் சில செலவுகளும்

இருக்கிறது. அதனால் கரும்பின் விலை 2 மடங்காக உயர்ந்து இருக்கிறது. இந்த விலை ஏற்றம் தவிர்க்க முடியாதது ஆகும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## <u>சிற்றார்–1 அணையில் தண்ணீர் திறப்பு</u>

குமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை விவசாயிகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி பெய்தது. அணைகள், குளங்கள் நிரம்பின. பருவமழை ஓய்ந்தபிறகும் சில நாட்கள் ஆங்காங்கே மழை பெய்தது. கடந்த சில நாட்களாக மழை பெய்யவில்லை. இருந்தாலும் அணைகளுக்கு தண்ணீர் வந்து கொண்டிருக் கிறது. பேச்சிப்பாறை அணைக்கு நேற்று வினாடிக்கு 388 கனஅடி தண்ணீர் வந்தது. இந்த அணையில் இருந்து பாசனத்துக்காக 694 கனஅடி தண்ணீர் திறந்து விட்டுள்ளனர். பெருஞ்சாணி அணைக்கு 112 கனஅடி தண்ணீர் வந்தது. இந்த அணையில் இருந்து 65 கனஅடி தண்ணீர் வெளியேறுகிறது. சிற்றார் (1) அணைக்கு நேற்று 100 கனஅடி தண்ணீர் வந்தது. இதே அளவை நேற்று பட்டணம் கால்வாயில் பாசனத்துக்காக திறந்து விட்டனர். அணைகளில் தண்ணீர் போதுமான அளவு இருப்பு உள்ளது. மாம்பழத்துறையாறு நேற்றும் நிறைநீர் மட்டத்தில் (54.12 அடி) இருந்தது.

## <u>எண்ணெய்வித்து பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் விவசாயிகளுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்</u>



எண்ணெய்வித்து பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என்று கலெக்டர் கணேஷ்அறிவுறுத்தியுள்ளார்.

விவசாயிகளுக்குபயிற்சி

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தில் எண்ணெய்வித்து பயிர்கள் மற்றும் எண்ணெய்ப்பனை தேசிய இயக்கத்தின் சார்பாக விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. கலெக்டர் கணேஷ் தலைமை

தாங்கி பயிற்சியை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

நவீனதொழில்நுட்பங்களை...

எண்ணெய்வித்து பயிர்களில் விவசாயிகள் அதிக மகசூல் பெற நவீன தொழில்நுட்பங்களைத் தவறாது கடைபிடிக்க வேண்டும். அரசின் வேளாண் திட்டங்களை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் இதுபோன்ற பயிற்சியில் கலந்து கொண்டு தங்களுக்கு தெரிந்து கொண்ட தொழில்நுட்பங்களை பிற விவசாயிகளுக்கும் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர்பேசினார்.

தொழில்நுட்பகையேடுகள்

அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தில் உழவர் பயிற்சி நிலையம் மூலம் தயார் செய்யப்பட்ட எண்ணெய்வித்து தொழில்நுட்ப சாகுபடிக் கையேட்டினை கலெக்டர் வெளியிட அதனை குடுமியான்மலை வேளா ண்மை கல்லூரி முதல்வர் பெற்றுக் கொண்டார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடுகள் வழங்கப்பட்டன. வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் பேசுகையில், நிலக்கடலைக்கு தேவையான ஜிப்சம் மானிய விலையில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளதெனவும், இதனை விவசாயிகள் பயன்படுத்தி நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெறுமாறும் கேட்டுக்கொண்டார். வேளாண்மை துணை இயக் குநர் சாந்தி, உழவர் பயிற்சி நிலையம் மூலம் நடத்தப்படும் பயிற்சிகளை தங்கள் பகுதியைச் சேர்ந்த பிற விவசாயிகளுக்கும் வழங்கிட கேட்டுக்கொண்டார். குடுமியான்மலை வேளாண்மை கல்லூரி முதல்வர் கஜேந்திரன் பேசுகையில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் தங்கள் வயல்களில் செயல்படுத்தி பயன்பெற கேட்டுக் கொண்டார். நிலக்கடலையில் விதைநேர்த்தி ஸ்டாமின் இயக்குநர் (பொறுப்பு) வெள்ளைச்சாமி, மத்திய அரசுத் திட்ட வேளாண்மைத் துணை இயக்குநர் சதானந்தம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். எண்ணெய்வித்து பயிற்சியில் நிலக்கடலையில் விதைநேர்த்தி, பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு,

உர நிர்வாகம், களை நிர்வாகம் குறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் எஸ்.ராஜசேகரன் பயிற்சி வழங்கினார். வம்பன் வேளாண் அறிவியல் நிலைய நோயியல் உதவிப் பேராசிரியர் மதியழகன், நிலக்கடலையை தாக்கும் பூச்சி நோய் குறித்து விளக்கி கூறினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பயிர் எண்ணிக்கை பராமரிப்பு மற்றும் விதைநேர்த்தி குறித்த தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. முடிவில் வேளாண்மை அலுவலர்(மத்திய திட்டம்) ஜெகதீஸ்வரி நன்றி கூறினார்.

**<u>பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் இந்திராகாந்தி எம்.எல்.ஏ வழங்கினார்</u>**



துறையூர் ஊராட்சி ஒன்றியம் சிங்களாந்தபுரம் ஊராட்சியில் தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்திராகாந்தி எம்.எல்.ஏ. தலைமை தாங்கி சிங்களாந்தபுரம் ஊராட்சியை சேர்ந்த 91 பயனாளிகளுக்கு ஆடுகளையும், ஆடுகளுக்கு கொட்டகை அமைக்கவும், தீவனத்திற்கும் காசோலையை வழங்கினார். ஒன்றிய செயலாளர் சேனை செல்வம் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் நகர செயலாளர் செக்கர் ஜெயராமன், முன்னாள் நகர செயலாளர் செல்வம், ஒன்றிய குழு துணைத்தலைவர் பாலசுப்ரமணியன், ஊராட்சி தலைவர் நடராஜன், துணைத்தலைவர் ராஜதுரை, துறையூர் வட்ட கூட்டுறவு விற்பனை சங்கதலைவர் மோகன்தாஸ், ஒன்றிய அவைத்தலைவர் தேவராஜ், முசிறி கால்நடை உதவி இயக்குனர் பழனிசாமி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். முன்னதாக ஒன்றிய குழு உறுப்பினர் கலைச்செல்வி துரைராஜ் வரவேற்றார். முடிவில் கால்நடை டாக்டர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

## திருச்செந்துறை வளாகத்தில் 4,479 வாழைத்தார்கள் ஏலம்



திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் வெளியிட்டு உள்ள ஒரு அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:– திருச்செந்துறை கிராமத்தில் அமைந்துள்ள வாழை வணிக வளாகத்தில் நேற்று 4,479 வாழைத்தார்கள் ஏலம் விடப்பட்டன. இந்த ஏலத்தில் 3,891 பூவன், 61 ரஸ்தாளி, 54 மொந்தன், 449 கற்பூரவள்ளி மற்றும் பச்சலாடன் 24 வாழைத்தார்கள் வந்திருந்தது. தொட்டியம், அந்தநல்லூர், திருப்பராய்த்துறை, பள்ளிவிடை, மண்ணச்சநல்லுரீர், கிளியநல்லுரீர், கரியமாணிக்கம், சிறுகாம்பூர், நங்கவரம், கோட்டமேடு, பண்டியபுரம், சென்னக்கரை, செங்குடி, கொடியாலம், பெருகமணி, குளித்தலை, சீத்தலைவாய், கிருஷ்ணராயபுரம், லால்குடி, தஞ்சாவூர், திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி ஆகிய கிராமங்களிலிருந்து 47 விவசாயிகள் தாங்கள் விளைவித்த வாழைத்தர்களுடன் ஏலத்தில் கலந்து கொண்டனர். மொத்தம் ரூ.2லட்சத்து 56 ஆயிரத்து 360 மதிப்பிற்கு ஏலம் நடைபெற்றது. அடுத்த ஏலம் வருகின்ற 30.12.2014 அன்று நடைபெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.